Level TWO | இரண்டாம் நிலை

# 72
# மனப்பாட வசனங்கள்



# 72 MEMORY VERSES

# வேத வசனங்களை மனப்பாடம் செய்வதினால் உண்டாகும் நான்கு நன்மைகள்!

Rev. J. கல்யாணகுமார்

“ஞாபக சக்தி” என்ற ஆற்றல் தேவனால் அருளப்படுகின்ற ஓர் அற்புதமான வரமாகும். வசனத்தை மனனம் செய்து அதை திரும்பவும் ஞாபகத்திற்குக் கொண்டு வரும்போது, அந்த வரமானது மிகவும் வல்லமையாக செயல்படுகின்றது. வேத வசனங்களை மனப்பாடம் செய்தல், நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு முற்றிலும் அஸ்திபாரமாக காணப்படுவது மட்டுமல்லாமல், கிறிஸ்தவ சீஷத்துவம் மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் மிக முக்கியமானதும் முதன்மையானதுமான ஒழுக்கமாகவும் கருதப்படுகின்றது!

வேத வசனங்களை மனப்பாடம் செய்வதினால் உண்டாகும் 4 நன்மைகள் யாவை என்பதை நாம் இங்கு காண்போம்.

## 1 வேத வசனங்களை மனப்பாடம் செய்யும் போது, அவைகள் என் இருதயத்திலும் சிந்தையிலும் சமாதானத்தை உண்டுபண்ணுகின்றன - PEACE

நமது இருதயமானது, எப்போதும் எதையாகிலும் சிந்தித்துக் கொண்டேயிருக்கிறது. அது தேவனை மையமாகக் கொண்டிராவிட்டால், வேறு எதையாகிலும் மையப்படுத்தி சிந்தித்துக் கொண்டேயிருக்கும். வேத வசனங்களை நாம் மனப்பாடம் செய்யும் போது, அச்செயலானது, நமது சிந்தையை வேத சத்தியத்தின்மீது குறிப்பாக கவனம் கொண்டிருக்க உதவுகிறது.



- கொலோசெயர் 3:2 – **“பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.”**
- ஏசாயா 26:3 – **“உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.”**

<u>வாசியுங்கள்</u>: பிலிப்பியர் 4:6-8

கவலையற்றவர்களாக வாழவும் தேவ சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளவும் நாம் செய்ய வேண்டியது என்னவென்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார். சிந்திக்கத் தகுதியானவைகளை மாத்திரம் நாம் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டுமென அவர் இங்கு வலியுறுத்துகிறார் (வசனம் 8). வேத வசனங்களை மனப்பாடம் செய்வதின் மூலமாக, இச்சை நிறைந்த எண்ணங்கள், மனச்சோர்வு உண்டாக்குகிற எண்ணங்கள், நம்மை அடிமைப்படுத்துகிற எண்ணங்கள் போன்றவற்றை நாம் மேற்கொண்டு ஜெயம் பெறுவோம். வேத வசனங்களை மனப்பாடம் செய்வதைக் காட்டிலும் வேறெந்த விதத்திலும் நாம் அவற்றை மேற்கொள்ள இயலாது.

## 2 வேத வசனங்களை மனப்பாடம் செய்தலானது, ஞானத்தை என்னில் பெருகச் செய்கிறது - PERSPECTIVE

- சங்கீதம் 119:97-100 - **“உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்.”**

வேத வசனங்களை நாம் எவ்வளவுக்கதிகமாக மனப்பாடம் செய்கிறாமோ அவ்வளவுக்கதிகமாக தேவனுடைய வார்த்தையிலிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள்ள அது நமக்குள் திறமையை வளர்க்கிறது.

அது நமது அநுதின வாழ்வில் சரியான தீர்மானங்களைச் செய்யவும் சரியான பாதையில் செல்லவும் வழிநடத்துகின்றது! நாம் முழுமையான வளர்ச்சி அடையவும், நலம் பெறவும் வேத வசனங்கள் அருளப்பட்டிருக்கின்றன (2 தீமோத்தேயு 3:16-17).

## 3 வேத வசனங்களை மனப்பாடம் செய்தலானது, நான் சுத்தமானவனாக விளங்க உதவுகிறது - PURITY

- சங்கீதம் 119:9 - **“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே”.**
- சங்கீதம் 119:11 - **“நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.”**
- எபேசியர் 5:25,26 - **“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,”**

- யோவான் 15:3 – **“நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.”**

மேற்கண்ட வேத வசனங்கள் யாவும், நமது இருதயமும் வாழ்வும் கறைதிரையற்று பரிசுத்தமாக காணப்பட, தேவனுடைய வார்த்தை எத்தனை அவசியமானது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன!

## 4 வேத வசனங்களை மனப்பாடம் செய்தலானது, தேவனுடைய நோக்கத்தை விளங்கிக்கொள்ள எனக்கு பெரிதும் உதவுகின்றது – PURPOSE

எவ்வளவுக்கதிகமாய் வேத வசனங்களை நாம் வாசித்து, தியானித்து, மனப்பாடம் செய்கின்றோமோ, அவ்வளவுக்கதிகமாய் நமது வாழ்வுக்கான தேவனுடைய திட்டம் என்னவென்பதையும் அதில் ஒரு தெளிவையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். தேவனுடைய வார்த்தையானது, அவரது சித்தத்தையும், திட்டங்களையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. எவ்வளவுக்கதிகமாக அவரது வார்த்தையை நாம் விளங்கிக் கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கதிகமாக நாம் அவரது திட்டங்களுக்கும் நோக்கங்களுக்கும் நம்மை உட்படுத்திக் கொள்ளுவோம்!

- சங்கீதம் 119:105 – **“உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.”**
- சங்கீதம் 119:18,19 – **“உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும். பூமியிலே நான் பரதேசி; உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்.”**

வாசியுங்கள்: சங்கீதம் 119:102,104

நமது மனதை புதுப்பிக்கவும், அதனை நேர்நிலைக்கு கொண்டு வரவும் ஓர் நல்ல வழி வசன மனன பழக்கமாகும்!

One of the most effective ways of influencing our minds is through memorizing Scripture!



# Benefits of MEMORIZING THE BIBLE VERSES!

Rev. J. KALYANAKUMAR

The MEMORY is an amazing gift from God. And this gift is used most powerfully when it is used to recall scripture by heart. Bible memorization is absolutely fundamental to spiritual formation. This is one of the foremost... if not, the most important discipline of Christian Discipleship and spiritual life.

Let us now look at the 4 Benefits of Memorizing Bible Verses.

## 1 PEACE

Bible Memorization helps to bring Peace in my heart and mind.

The mind is always working and thinking. If it is not centered on God, it will be centered on something else. Memorizing the Bible verse helps because our mind is focused on truth!

- Colossians 3:2 - "**Set your minds on things above, not on earthly things.**"
- Isaiah 26:3 - "**You will keep in perfect peace in whose minds is steadfast, because he trusts in you.**"

Read Philippians 4:6-8, Of the few things that Paul recommends for us to stay free of anxiety and have peace is: THINK THE RIGHT THINGS (Verse 8). Restless thoughts, lustful thoughts, depressed thoughts and all other unhelpful thoughts can be crushed more effectively by nothing other than memorizing Bible verse.

## 2 PERSPECTIVE

Bible Memorization helps to Increase Wisdom in me.

- Psalm 119:97-100 - "**Oh, how I love your law! I meditate on it all day long. Your commands make me wiser than my enemies, for they are ever with me. I have more insight than all my teachers, for I meditate on your statutes. I have more understanding than the elders, for I obey your precepts.**"

As the number of verses I've memorized grows, so does my ability to draw from the wisdom that God's Word offers for my day to day living, decisions and directions! Scripture is given for my wholistic development and welfare (2 Timothy 3:16,17)!

## 3 PURITY

Bible Memorization helps me to stay pure.

- Psalms 119:9 - "**How can a young man keep his way pure? By living according to your word.**"
- Psalm 119:11 - "**I have hidden your word in my heart that I might not sin against you.**"
- Ephesians 5:25,26 - "**Husbands, love your wives, just as Christ loved the church and gave himself up for her to make her holy, cleansing her by the washing with water through the word,**"
- John 15:3 - "**You are already clean because of the word I have spoken to you.**"

All the above Scripture Verses very clearly highlight the importance of God's word in our heart to live a life without blemish and stay pure!

## 4 PURPOSE

Bible Memorization helps me understand God's Plan.

The more we read, study, meditate, understand and memorize the scriptures, we will be able to have clarity on God's Purpose for us. God's Word reveals God's Will and God's Plan. The more we understand His word, the more we can be aligned to His Plan & Purpose!

- Psalm 119:105 - "**Your word is a lamp for my feet, a light on my path.**"
- Psalm 119:18,19 - "**Open my eyes that I may see wonderful things in your law. I am a stranger on earth; do not hide your commands from me.**"

Also Read: Psalm 119:102,104

# மனப்பாட வசனங்கள்

**1 எபேசியர் 4:2,3**

மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

**2 கலாத்தியர் 6:9**

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

**3 2 தீமோத்தேயு 2:12**

அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்;

**4 பிலிப்பியர் 1:29**

ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.

**5 1 பேதுரு 4:11**

ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

**6 1 யோவான் 5:3**

நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.

## 7 கொலோசெயர் 3:24

எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.

## 8 கொலோசெயர் 3:13

ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

## 9 1 பேதுரு 1:7

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

## 10 1 பேதுரு 3:12

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது.

## 11 யாக்கோபு 3:16,17

வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

## 12 நீதிமொழிகள் 12:1

புத்திமதிகளை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான்; கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவனோ மிருககுணமுள்ளவன்.

## 13 யாக்கோபு 1:21

ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

## 14 1 கொரிந்தியர் 15:19

இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.

## 15 எபிரெயர் 12:11-13

எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்.

## 16 பிரசங்கி 7:5

ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்.

## 17 எரேமியா 2:19

உன் தீமை உன்னைத் தண்டிக்கும், உன் மாறுபாடுகள் உன்னைக் கண்டிக்கும்; நீ உன் தேவனாகிய கர்த்தரை விடுகிறதும், என்னைப்பற்றும் பயம் உன்னிடத்தில் இல்லாமலிருக்கிறதும், எத்தனை பொல்லாப்பும் கசப்புமான காரியம் என்று உணர்ந்துகொள் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

**18 சங்கீதம் 143:10**

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.

**19 சங்கீதம் 25:4,5**

கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள் முழுதும் காத்திருக்கிறேன்.

**20 நீதிமொழிகள் 28:20**

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்.

**21 1 யோவான் 3:16**

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

**22 1 சாமுவேல் 2:8**

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்; பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள்; அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார்.

**23 2 கொரிந்தியர் 5:21**

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

## 24 1 தெசலோனிக்கேயர் 5:14,15

மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்.

## 25 1 தீமோத்தேயு 4:12

உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

## 26 2 யோவான் 8

உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

## 27 அப்போஸ்தலர் 4:12

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

## 28 ஏசாயா 61:3

சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.

## 29 எசேக்கியேல் 36:26

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.

## 30 எரேமியா 2:13

என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்.

## 31 யாக்கோபு 1:8

இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.

## 32 யாக்கோபு 1:13

சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

## 33 யாக்கோபு 4:17

ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

## 34 யோவான் 13:34,35

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

## 35 யோவான் 16:33

என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.

## 36 புலம்பல் 3:22,23

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.

## 37 லூக்கா 21:35,36

பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.

## 38 மத்தேயு 5:13,14

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

## 39 மத்தேயு 6:33

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

**40 மத்தேயு 24:14**

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

**41 பிலிப்பியர் 3:12**

நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.

**42 நீதிமொழிகள் 16:7**

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்.

**43 நீதிமொழிகள் 28:9**

வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது.

**44 நீதிமொழிகள் 29:15**

பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்.

**45 சங்கீதம் 12:6**

கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது.

**46 ரோமர் 8:1**

ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.

## 47 சங்கீதம் 73:25,26

பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.

## 48 சங்கீதம் 141:5

நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்.

## 49 வெளிப்படுத்தல் 3:21

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

## 50 ரோமர் 13:1

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.

## 51 தீத்து 2:14

அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

**52 யோவேல் 2:13**

நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்.

**53 யோவான் 6:63**

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

**54 யோவான் 8:29**

என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை என்றார்.

**55 யோவான் 14:23**

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.

**56 யோவான் 15:7**

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

**57 யோவான் 16:13**

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

**58 ரோமர் 5:21**

ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது
போல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக
ஆண்டுகொண்டது.

**59 ரோமர் 6:19**

உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர்
பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி
முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும்
அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல,
இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள்
அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்.

**60 ரோமர் 14:8**

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம்
மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால்
பிழைத்தாலும் மரித்தாலும் நாம்
கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

**61 ரோமர் 14:17**

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும்
சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும்
சந்தோஷமுமாயிருக்கிறது.

**62 கலாத்தியர் 2:20**

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும்,
பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள்
பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில்
பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத்
தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும்
விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

## 63 எபேசியர் 2:10

ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

## 64 எபேசியர் 4:22-24

அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

## 65 எபேசியர் 6:18

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.

## 66 கொலோசெயர் 2:14,15

நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.

## 67 எபிரெயர் 12:10

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

**68 1 தீமோத்தேயு 2:1,2**

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.

**69 எபிரெயர் 4:1**

ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்.

**70 எபிரெயர் 9:28**

கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.

**71 1 பேதுரு 3:15**

கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.

**72 வெளிப்படுத்தல் 21:7**

ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

# MEMORY VERSES

| | |
|---|---|
| 1 | Ephesians 4:2,3 |
| 2 | Galatians 6:9 |
| 3 | 2 Timothy 2:12 |
| 4 | Philippians 1:29 |
| 5 | 1 Peter 4:11 |
| 6 | 1 John 5:3 |
| 7 | Colossians 3:23 |
| 8 | Colossians 3:13 |
| 9 | 1 Peter 1:7 |
| 10 | 1 Peter 3:12 |
| 11 | James 3:16, 17 |
| 12 | Proverbs 12:1 |
| 13 | James 1:21 |
| 14 | 1 Corinthians 15:19 |
| 15 | Hebrews 12:11-13 |
| 16 | Ecclesiastes 7:5 |
| 17 | Jeremiah 2:19 |
| 18 | Psalm 143:10 |
| 19 | Psalm 25:4,5 |
| 20 | Proverbs 28:20 |
| 21 | 1 John 3:16 |
| 22 | 1 Samuel 2:8 |
| 23 | 2 Corinthians 5:21 |
| 24 | 1 Thessalonians 5:14,15 |
| 25 | 1 Timothy 4:12 |
| 26 | 2 John 8 |
| 27 | Acts 4:12 |
| 28 | Isaiah 61:3 |
| 29 | Ezekiel 36:26 |
| 30 | Jeremiah 2:13 |
| 31 | James 1:8 |
| 32 | James 1:13 |
| 33 | James 4:17 |
| 34 | John 13:34,35 |
| 35 | John 16:33 |
| 36 | Lamentations 3:22,23 |

# MEMORY VERSES

37 Luke 21:35,36
38 Matthew 5:13,14
39 Matthew 6:33
40 Matthew 24:14
41 Philippians 3:12
42 Proverbs 16:7
43 Proverbs 28:9
44 Proverbs 29:15
45 Psalm 12:6
46 Romans 8:1
47 Psalm 73:25,26
48 Psalm 141:5
49 Revelation 3:21
50 Romans 13:1
51 Titus 2:14
52 Joel 2:13
53 John 6:63
54 John 8:29
55 John 14:23
56 John 15:7
57 John 16:13
58 Romans 5:21
59 Romans 6:19
60 Romans 14:8
61 Romans 14:17
62 Galatians 2:20
63 Ephesians 2:10
64 Ephesians 4:22-24
65 Ephesians 6:18
66 Colossians 2:14,15
67 Hebrews 12:10
68 1 Timothy 2:1,2
69 Hebrews 4:1
70 Hebrews 9:28
71 1 Peter 3:15
72 Revelation 21:7

# தேவனுடைய வார்த்தையை மனப்பாடம் செய்யச் சொல்லும் வேத வசனங்கள்

**BIBLE TELLS US TO MEMORIZE SCRIPTURE VERSES**

Deuteronomy 11:18
Psalm 37:31
Psalm 40:8
Psalm 119:11,16
Proverbs 4:21
John 15:7
Colossians 3:16
2 Timothy 3:15

உபாகமம் 11:19
சங்கீதம் 37:31
சங்கீதம் 40:8
சங்கீதம் 119:11,16
நீதிமொழிகள் 4:21
யோவான் 15:7
கொலோசெயர் 3:16
2 தீமோத்தேயு 3:15



# கடைசி கால வஞ்சகத்திற்குத் தப்பித்துக்கொள்ள...

மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில், கடைசி கால அடையாளங்களைக் குறித்து இயேசு சொல்லும்போது..., நான்கு முறை வஞ்சகத்தைக் குறித்து சொல்லி எச்சரித்தார் (மத்தேயு 24:4,5,11,24)!
வஞ்சகம் என்பது உண்மையில்லாத காரியத்தை உண்மை என்று நம்பி ஏமாந்து போவதாகும். ‘யார் வஞ்சிக்கப்படுவார்கள்?’ வேத வசனம் தெரியாதவர்கள்தான் வஞ்சகத்திற்குள் சிக்குவார்கள்!

- 2 தெசலோனிக்கேயர் 2:10 - **“கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்.”**

எனவேதான், இக்கடைசி காலத்தில்... வேத வசனத்தை மனனம் செய்தல் நமக்கு மிகவும் நல்லது!



# TO ESCAPE THE LAST DAY RELIGIOUS DECEPTION...

In Matthew 24, when Jesus gave the signs for the end of the age & His second coming... He mentioned DECEPTION 4 times (Matthew 24:4,5,11,24)!
To believe what is not truth to be true is deception! Those who don't have the love for the truth are candidates for deception!

- 2 Thessalonians 2:10 - **“and all the ways that wickedness deceives those who are perishing. They perish because they refused to love the truth and so be saved.” (NIV)**

That is why... in this last days... It is important that we memorize the Scripture Verses!



One of the
most effective ways
of influencing
our minds is through
Memorizing
Scripture!

**To get this Scripture Memory booklet, send your full Address to the following WhatsApp Number:**

**+91 95000 50315**